**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | MCOP | 63 | of | 2019 |

**2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 13-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் ம.சா.3-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜலட்சுமி | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | Assistant personal officer, IGCAR | வயது | |

**நாள்-13.07.2026**

**ம.சா.-3**

**முதல் விசாரணை-**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் நீதிமன்றம் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். இறந்து போன தர்ம லிங்கம் மத்திய அரசு நிறுவனமான எங்கள் நிறுவனத்தில் Foreman-A ஆக வேலை பார்த்து ஓய்வு பெற்றார். 31.05.2015 அன்று ஓய்வு பெற்றார். அவர் 7.06.2018 ல் நடந்த சாலை விபத்தில் இறந்துவிட்டார்.அவர் இறக்கும் போது ரூ.19,520/- மற்றும் 60 சதவீதம் Dearness allowance என மொத்தம் ரூ.31,238/- வாங்கினார். அவர் இறந்ததால் குடும்ப pension ஆக அவருடைய குடும்பத்தாருக்கு

அதில் 30 சதவீதம் மட்டுமே கிடைக்கத்தக்கது. அவர் குடும்பம் தற்போது 13860 மற்றும் 60 சதவீதம் Dearness allowance ஆக மொத்தம் ரூ.22176/- ஆகும். அவருடைய basic pay ரூ.46,200/- ஆகும். அதில் 30 சதவீதம்தான் குடும்ப ஒய்வூதியம் கிடைக்கும். அதை காட்டக்கூடிய கணக்கிடு பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ. 17 ஆகும்.

2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

தொழிலாளி ஒய்வு பெற்ற பிறகு அவருக்கும் நிர்வாகத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். பென்ஷன் வழங்குவது CPAO ஆகும். பென்ஷன் தவிர அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு அவ்வப்போது வழங்கும் உத்தரவிற்கு இணங்க வழங்கப்படுகிறது. அகவிலைப்படி உயர்வு பணியிலிருக்கும் மற்றும் ஓய்வு பெற்ற அனைவருக்குமே கிடைக்ககதக்கதாகும். பணப்பலன் வழங்கப்படுவது சம்பளம் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை- இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu